ராணி
காமிக்ஸ்
முகமூடிவீரர்
மாயாவி
தோன்றும்
நெருப்பு
கக்கும்
கழுகு

புதிதாகத் திருமணமான அவர்கள் வீட்டுக்கு அப்பொழுதுதான் வெளியான திரைப்படத்துக்கு இரண்டு உயர்வகுப்பு டிக்கட்டுகளும், 'இதை யார் அனுப்பியது கண்டுபிடியுங்கள்' என்ற குறிப்பும் கொண்ட கடிதம் தபாலில் வந்தது.

எவ்வளவோ சிந்தித்தும் அவர்களால் யார் அனுப்பி இருப்பார்கள் என்று கண்டுபிடிக்க முடியவில்லை.

குறிப்பிட்ட நாளில் இருவரும் அந்தத் திரைப்படம் பார்த்துவிட்டு வீடு திரும்பினார்கள். வீட்டிலிருந்த விலை உயர்ந்த பொருட்கள் எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன.

அவர்கள் வீட்டுக் கதவில் ஒரு தாள் ஒட்டியிருந்தது. அதில் 'இப்பொழுது உங்களுக்கு டிக்கட் யார் அனுப்பியிருப்பார்கள் என்று கண்டுபிடித்திருப்பீர்களே' என்று எழுதியிருந்தது.



பணக்காரன் ஒருவன் இறந்துவிட்டான். அவனை அடக்கம் செய்வதற்காகக் குழியில் இறக்கினார்கள்.

அங்கு கூடியிருந்த நண்பர்களில் ஒருவன், "என் நட்பின் அடையாளமாக இந்த ரூபாய்" என்று சொல்லிப் பத்தாயிரம் ரூபாயை நண்பனின் பிணத்தின் மேல் எறிந்தான்.

இன்னொருவன் தன் பெருமையைக் காட்ட இருபதாயிரம் ரூபாயை எறிந்தான்.

மூன்றாமவன், இருவரும் எறிந்த முப்பதாயிரம் ரூபாயை எடுத்துக்கொண்டு, செக் புத்தகத்தில் 'ஒரு லட்சம் ரூபாய்' என்று எழுதி நண்பனின் பிணத்தின் மேல் போட்டான்.

y fields and lo
ort breaks and lun



உங்களுக்கு படம் வரையத் தெரியுமா? உங்கள் திறமையை வளர்த்துக்கொள்ள இதோ ஓர் அரிய வாய்ப்பு. உங்களுக்குள் மறைந்து கிடக்கும் ஓவியத் திறமையை வெளியே கொண்டு வந்து வளர்க்க "ராணி காமிக்ஸ்" ஒரு போட்டியை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறது.

ஒரு வெள்ளைத்தாளில் உங்கள் கற்பனை ஓவியத்தை கறுப்பு மையால் (பென்சிலால் வரையக் கூடாது.) வரைந்து அனுப்புங்கள். படத்திற்குப் பின்னால் உங்கள் பெயரையும், முகவரியையும் எழுதி அனுப்புங்கள். ஒருவர் எத்தனை படம் வேண்டுமானாலும் வரைந்து அனுப்பலாம்.

படங்களை அஞ்சல் உறையில் வைத்து, முகவரி எழுதவேண்டிய இடத்தில், இத்துடன் உள்ள முகவரியை வெட்டி ஒட்ட வேண்டும்.

ஒவ்வொரு "ராணி காமிக்ஸ்" இதழிலும் நான்கு படங்கள் தேர்ந்தெடுத்து வெளியிடப்படும். அந்தப் படங்களை வரைந்தவர்களுக்கு தலா ரூ. 25 பரிசு வழங்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:-

ஓவியப் போட்டி,
"ராணி காமிக்ஸ்",
சென்னை-600 007.

பரிசு பெற்ற படங்கள்!

எல். குமாரி சந்தியா,
களியக்காவிளை.



தி. சுரேஷ்குமார்,
பெருங்களத்தூர்.

கே. கோவிந்தராஜன்,
சேலம்.

சி. ஆர். ஜெயக்கிருஷ்ணா,
சென்னை-28.

ராணி காமிக்ஸ்-168
(மாதம் இருமுறை இதழ்)
TV
ஜூன் 16-30
1991


பழைய காலத்தில் ஒரு கதை சொல்வது உண்டு. நெருப்புக் கக்கும் இராட்சதக் கழுகு ஒன்று இருந்தது என்றும், அதற்குக் கோபம் வந்துவிட்டால் தனக்குப் பிடிக்காத கிராமங்கள் மீது நெருப்பை வீசி அழித்துவிடும் என்றும், அதனால் மக்கள், அந்தக் கழுகை தெய்வமாக வழிபட்டார்கள் என்றும் ஒரு கதை இருக்கிறது.
GANDOR!
அந்த கழுகு தெய்வத்திற்கு குருமார்கள் இருந்தார்கள். அவர்கள் இன்றும் அந்த கழுகுச் சிலையை வைத்து வழிபட்டு வருகிறார்கள்.


சிறுவர்கள் குருவை கேலி செய்தார்கள். ஏன் என்றால் குருமார்கள் கழுகைப் போல இறக்கை வைத்திருந்தார்கள்.
அய்யா! கழுகு மனிதன்!
வானத்தில் பறக்கிற மாதிரி இறக்கை வைத்திருக்கிறார், பார்!

கழுகு எரிமலைக்குள் தீப்பிழம்போடு தீ பிழம்பாக இருக்கும்.
கோபம் வரும்பொழுது வெளிவந்து, நெருப்பை அள்ளிச் சென்று...
கிராமத்தின் மீது போட்டுவிடும்.
இப்படியாகக் கிராமத்தையே அழித்துவிடும்.
அதனால், நெருப்புக் கழுகு தங்கள் கிராமத்தை நோக்கிப் பறந்து வருவதைப் பார்த்தவுடனேயே மக்கள் பீதியடைந்து நாலாபுறமும் தலைதெறிக்க ஓடுவார்கள்.


கிராமத்தையே கூடத் தூக்கிச் சென்று,
எரிமலைக்குள் போட்டுவிடும்.


ஆத்திரம் தீர்ந்ததும் கழுகு எரிமலையில் ஓய்வு எடுக்கத் தொடங்கிவிடும் என்று பழங்கதை சொல்கிறது.


சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு கழுகு பெயரைச் சொல்லி பல குருமார்கள் தோன்றினார்கள். அவர்கள் எரிமலையின் விளிம்பிலேயே கழுகுத் தெய்வத்திற்கு கோயில் கட்டினார்கள்.
கழுகுத் தெய்வத்தின் கோபத்திற்கு ஆளாகக்கூடாது என்று குருமார்கள் எல்லாக் கிராமங்களையும் கோயிலுக்குக் காணிக்கை செலுத்தச் சொன்னார்கள்.


அதன்படியே கிராம மக்கள் காணிக்கையாகப் பொற்காசுகளை கோவில் உண்டியலில் போட்டுச் செல்வார்கள்.

மாதம் ஒருமுறை காணிக்கையை சேகரித்து, கருவூலத்தில் கொண்டு போய்க் கொட்டுவார்கள் என்றும் எழுதி வைத்திருந்தார்கள்.


ஆனால், இன்று கோயில் உண்டியலில் சிலந்தி கூடு கட்டியிருக்கிறது. மக்கள் யாரும் காணிக்கை போடுவதில்லை.
இப்பொழுது ஏன் யாரும் காணிக்கை செலுத்துவது இல்லை?
அது அந்தக் காலம்!
அவ்வளவு அலட்சியமா? கழுகுத் தெய்வம் உங்களை அழிக்காமல் விடாது!
காட்டு எல்லையில் அமைந்துள்ள ஒரு நகரம் மிகவும் பரபரப்பாகக் காணப்பட்டது. மக்கள் கையில் ஆயுதங்களுடன் ஓர் அலுவலகத்தின் முன் ஆர்ப்பாட்டம் பண்ணிக் கொண்டிருந்தார்கள்.
UTOPIA
MINING COMPANY
OFFICE
GENARAL STORE
STORE
தாஸ்! நாம் இவர்களை ஏமாற்றிப் பணம் பறித்ததை கண்டுபிடித்து விட்டார்கள்!
கிறிஸ்டோபர்! அவர்கள் கையில் அகப்பட்டு விட்டால் துவைத்து எடுத்துவிடுவார்கள்! என்ன செய்வது?
கையில் அகப் பட்டால்தானே! சில நிமிடங்களில் இங்கிருந்து படகு புறப்படும் அல்லவா?

ஏய் கிறிஸ்டோபர்! மரியாதையாகப் பணத்தை திருப்பிக் கொடுத்துவிடு!
கதவைத் திறடா? நாங்கள் உள்ளே வந்தால் அவ்வளவுதான்!
அதற்குள் கிறிஸ்டோபரும், தாசும் சன்னல் வழியாகக் கீழே இறங்கினார்கள்
தாஸ்! சீக்கிரம்! குதிரையைக் கிளப்பு! படகுத்துறைக்குப் போ!
மக்கள் கதவை உடைத்து அலுவலகத்துக்குள் இருவரையும் தேடினார்கள்.
UTOPIA MINING COMPANY
அதோ தப்பி ஓடுகிறார்கள்! பிடியுங்கள்! விடாதீர்கள்!
சுடுங்கள்!
டுமீல்
இருவரும் குதிரையில் ஏறி, படகுத் துறைக்கு விரைந்தார்கள்.
படகுத்துறையில் இவர்கள் நுழைவதற்கும், படகு புறப்படுவதற்கும் சரியாக இருந்தது குதிரையில் இருந்து இறங்கி படகுக்குத் தாவினார்கள். எல்லாமே மின்னல் வேகத்தில் நடந்து முடிந்தது.
!
கிறிஸ்டோபர்! அங்கே பார். அவர்கள் வந்து விட்டார்கள்!
இனி நம்மை அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது.

எப்படியோ தப்பி விட்டோம்! இனி பிழைப்புக்கு என்ன செய்வது?
ஏன் பயப்படுகிறாய்? இவர்களைப் போல ஏமாளிகள் உலகில் நிறையப் பேர் இருக்கிறார்கள்!
அங்கே–
இவனைப் போல கழுகு மனிதன் நிறையப் பேர் இருக்கிறார்கள்!
ஏய் முட்டாள்...!
இதற்கெல்லாம் நீங்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும்
காட்டாறில் படகு சென்றுகொண்டிருந்தது. கிறிஸ்டோபரும், தாசும் பெரிய ஆபத்தில் இருந்து தப்பி நிம்மதியாகப் பயணம் செய்துகொண்டிருந்தார்கள்.
கிறிஸ்டோபர்! போகிற இடத்தில் நிம்மதியாக இருக்க முடியுமா?
ஏன், நம்பிக்கை யில்லையா?
கையில் பணம் வேறு இல்லை! அதான் யோசிக்கிறேன்!
போகிற இடத்தில் எப்படியும் பணம் சம்பாதித்துக் கொள்ளலாம்!

படகு ஒவ்வொரு கிராமம் கிராமமாக சென்று, ஆட்களை ஏற்றிக்கொண்டும், பொருட்களை ஏற்றிக்கொண்டும் புறப்பட்டது.
தாஸ்! இங்கே சில மணி நேரம் படகு நிற்கும்! வா, உள்ளே போய் ஏதாவது பணம் கிடைக்குமா என்று பார்த்து வருவோம்!
ஏய்... கிறிஸ்டோபர், அங்கே பார்! கழுகு மனிதன்!
ஏய்...! நானும் கழுகு மனிதன் ஆகி விட்டேன்! எல்லாரும் ஓடி வாருங்கள்!
பொடியர்களே! பேசாமல் ஓடி விடுங்கள்!
இவர் குரு! கிராமம் கிராமமாக சென்று கழுகு தெய்வத்திற்கு சேர வேண்டிய காணிக்கையை சேகரித்து வருகிறார்!
படகுக்காரனிடம் கிறிஸ்டோபர் விசாரித்தார்.

பல ஆண்டுக்கு முன் மக்கள் கழுகு தெய்வத்திற்குப் பயந்து பொற்காசு களை காணிக்கையாக செலுத்தி வந்தார்கள். ஆனால், இப்போது யாருமே இவரைக் கண்டு கொள்வது இல்லை!
ஏய்...! இங்கே வா! நான் உன்னுடன் பேச வேண்டும்!
விசித்திர மனிதனாக இருக்கிறானே!
கிறிஸ்டோபர் குருவை அழைத்தான்.
ஏய்...! என்ன இது? பைத்தியக்காரத்தனமாக இறக்கை எல்லாம் வைத்திருக்கிறாய்!
யார் நீ! அநாவசியமாகப் பேசாதே!
ஏய் கிழவா! இது என்ன? புதுவிதமான வியாபாரமா?
இது கடவுள் சமாச்சாரம்! அநாவசியமாக மூக்கை நீட்டாதே!

கேலி செய்யவில்லை! உண்மையாகத்தான் கேட்கிறேன்!
?
அதேநேரம்— மாயாவியின் குகையில்...
இன்றும் கழுகின் பெயரைச் சொல்லி ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்களா?
இல்லை! மக்கள் திருந்திவிட்டார்கள்! காணிக்கை செலுத்துவதை நிறுத்திவிட்டார்கள்!
குருமார்கள்தான் ஏதாவது காணிக்கை கிடைக்குமா என்று அலைந்துகொண்டிருக்கிறார்கள்!
முன்பு, கழுகு தெய்வத்திற்குக் காணிக்கை செலுத்தாதவர்கள் எல்லாம் பாவம் செய்தவர்களாகக் கருதப்பட்டார்கள்.
கிறிஸ்டோபருக்கு கழுகுத் தெய்வத்தைப் பற்றிக் குரு எடுத்துரைத்தார்.

கழுகு தெய்வத்திற்கு கோபம் வந்துவிட்டால் நெருப்பைக் கொண்டு வந்து கிராமத்தையே அழித்துவிடும்.
அதைப் பார்த்த பிறகு மற்ற கிராமங்கள் ஒழுங்காக காணிக்கை செலுத்தி வந்தார்கள்!
படகில் ஏறுங்கள்! படகு புறப்படப் போகிறது!
இல்லை கேப்டன்! எங்களுக்கு இங்கு முக்கிய வேலையிருக்கிறது! நீங்கள் புறப்படலாம்!
?
கிறிஸ்டோபர்! இங்கு நமக்கு என்ன வேலை!
தாஸ்! நாம் இங்கிருந்தால் இந்த குருக்களை வைத்து பல கோடி ரூபாய் சம்பாதிக்கலாம்!
அபபடியா!
படகு புறப்பட்டுச் சென்றது.
நீங்கள் ஏன் எங்கள் கோவிலையும். தலைமை குருவையும் பார்க்க வேண்டும்?
ஒரு மன ஆறுதலுக் காகத்தான்!
ஆமாம்!

அப்படினால், நீங்கள் எங்கள் இனத்துடன் சேரப் போகிறீர்களா?
அப்படியே வைத்துக் கொள்ளலாம்!
?
கிழவன் எல்லா வற்றையும் நம்பி விட்டான்!
என்ன கிறிஸ்டோபர்! அவர்கள் இனத்துடன் சேரப்போகிறாயா?
தாஸ்! நான் சொல்கிறபடி செய்தால் நாம் லட்சாதிபதி ஆகிவிடலாம்!
அவர்கள் இருவரையும் செங்குத்தான மலைப் பாதையில் குரு அழைத்துச் சென்றான்.
எரிமலையின் விளிம்பில் பாழடைந்து கிடந்த கழுகுக் கோயிலுக்கு மூவரும் வந்து சேர்ந்தார்கள்.
ஆகா! அமைதியான இடம்!
இந்தக் கோவில் பிரசித்திப் பெற்றிருந்தது. நிறைய கோவில்களும், ஏராளமான மதகுருக்களும் இருந்தார்கள். இப்போது எல்லாமே அழிந்துவிட்டன!

இங்கே நில்லுங்கள்! இதோ வருகிறேன்!
தலைமை குருவிடம் எங்களைப் பற்றி எடுத்துச் சொல்லுங்கள்!
குரு, தலைமை குருவை சந்தித்து விசயத்தை கூறினார்.
சரி! அவர்களை அழைத்து வா!
வாருங்கள் நண்பர்களே!
இவன்தான் தலைவனா! நேரடியாகவே விசயத்திற்கு வந்துவிட வேண்டியது தான்!
?
தலைவரே! வியாபார விசயமாகத்தான் உங்களை காண வந்தேன்! உங்கள் கோவிலுக்கு முன்பு கிடைத்த மாதிரி இப்பவும் காணிக்கை கிடைக்க ஏற்பாடு செய்கிறேன்!
காணிக்கையா? முன்பு போலவா? என்ன விளையாடு கிறாயா?

இல்லை தலைவரே! உண்மையைச் சொல்கிறேன்!
இவன் குரலைப் பார்த்தால் பழமையான ஆள் போலத் தெரிய வில்லை!
அதனால் இவனை எளிதில் நம் வழிக்கு கொண்டு வந்துவிடலாம்!
என்ன தலைவரே! நான் சொல்வது புரிகிறதா? இல்லையா?
உங்கள் கோவில் முன்பு எப்படி யிருந்தது? அதை கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்! பழைய செல்வாக்கை மீண்டும் கொண்டு வருகிறேன்!
முன்பு போலவா?
"உங்கள் குருக்களை ஒவ்வொரு கிராமத்திற்கும் அனுப்பி வைத்து பொன்னையும் பொருளையும் அள்ளி வந்து குவித்துக் காட்டுகிறேன்."

முன்பு போல கழுகு தெய்வத்தை கண்டு மக்கள் பயப்படும்படி செய்யவேண்டியது என் பொறுப்பு! பழைய மரியாதை திரும்பக் கிடைக்கும் என்ன சொல் கிறீர்கள்...!
இராட்சத கழுகுப் பறவை செய்வதற்கு பணம் வேண்டும்!
பொம்மை பறவையை வைத்துதான் மக்களை ஏமாற்ற வேண்டும்!
பொம்மை பறவையா?
எங்கள் தெய்வத்தை அவ மதித்தால் சாவு நிச்சயம் என்று சொல்வார்கள்! தெய்வத்தின் பெயரைச் சொல்லி ஏமாற்றச் சொல்கிறாயா?
சரி தலைவரே! இது சரிப்பட்டு வராது! நான் புறப்படுகிறேன்! வரட்டுமா?
நில்லுங்கள்! உங்கள் திட்டத்தை முழுமையாக சொல்லுங்கள்!
அப்படி வாருங்கள்!

ஏய்...! நான் இவர்களுடன் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தப் போகிறேன்! யாரையும் உள்ளே விடாதே!
சரி தலைவரே!
கிறிஸ்டோபர் என்ன இதெல்லாம்?
தாஸ்! பொறுமையாக இரு! நமக்கு பெரிய தங்கப் புதையலே கிடைக்கப் போகிறது!
சரி! உங்கள் திட்டத்தை சொல் லுங்கள்!
எனக்கு முதலில் ஒரு உண்மை தெரிய வேண்டும்!
கழுகு கோவிலுக்கு மக்கள் செலுத்திவந்த காணிக்கையை நிறுத்தியது யார்?
போன நூற்றாண்டில் இருந்த மாயாவிதான் அதற்கு முற்றுப் புள்ளி வைத்தார்.
மாயாவியா?

போன நூற்றாண்டில்—
கழுகு நெருப்பை அள்ளிக்கொண்டு வந்து போடுகிறது என்பதெல்லாம் மூடநம்பிக்கை! நீங்கள் காணிக்கை செலுத்துவதை நிறுத்துங்கள்! கழுகு எப்படி நெருப்பை போடுகிறது என்று பார்ப்போம்!
மாயாவி மக்களுக்கு புரியும்படியாக எடுத்துரைத்து காணிக்கை செலுத்துவதை நிறுத்தினார்.
அது உண்மைதானா என்று இப்போது நம்ப வைக்கிறேன்!
இது மூட நம்பிக்கைதானே! ஆனால் மக்கள் உண்மை என்றே நம்பினார்கள்! அதையும் மாயாவி கெடுத்துவிட்டார்!
மாயாவியா? யாரது? கஜானா நிறைவதை நிறுத்தி விட்டாரா...! பரவாயில்லை! இது பழங் கதைதானே! நெருப்பு கக்கும் கழுகு உண்மை என்று நாம் இப்போது மக்களை நம்ப வைப்போம்!
கழுகு நெருப்பை கொண்டுவந்து போடுவதை மக்கள் யாருமே பார்த்ததில்லை. பலர் சொல்லித்தான் கேள்விப்பட்டு இருக்கிறார்கள்!

ஆனால், இப்போது உண்மையிலேயே அந்தக் காட்சியை மக்கள் பார்க்க போகிறார்கள்! மீண்டும் உங்கள் கஜானா நிறையப் போகிறது!
எப்படி?
பிறகு சொல்கிறேன்! வருகின்ற காணிக்கையில் பாதி எனக்கு வந்துவிட வேண்டும்!
சரி! சம்மதிக்கிறேன்!
தலைவர் சம்மதித்தார்.
என்னுடைய திட்டத்தை நிறைவேற்ற பணம் வேண்டும்.
பணமா? மக்கள் கொடுப்பார்கள் என்று நீதானே சொன்னாய்!
?
ஆமாம்! நம் திட்டத்திற்கு சில பொருட்கள் வாங்கவேண்டி இருக்கிறது!
எவ்வளவு பணம் வேண்டும்?
அதிகமில்லை. ஆயிரம் பொற்காசுகள மட்டும் கொடுங்கள்!

நகர படகு துறையில்-
கேப்டன்! இந்த பெரிய பெட்டிகளை எல்லாம் எங்கே இறக்க வேண்டும்?
கழுகு கிராமத்தில்! நம் வருகைக்காக இரண்டு பேர் அங்கே காத்திருப்பார்கள!
கிறிஸ்டோபர் நிறைய பொருட்கள் வாங்கி படகில் ஏற்றிவிட்டு காட்டாறில் காத்திருந்தான்.
இங்கே, இந்தப் பக்கம் வாருங்கள்!
காட்டில் அவன் சொன்ன இடத்தில் பெட்டிகளை இறக்கினார்கள்.
இந்த பெட்டிகளை நடுக் காட்டுக்குள் ஏன் இறக்குகிறார்கள்?
தாஸ்! இதைப் போல இரண்டு கட்டுமரங்களை தயார் செய்யச் சொல்! கழுகு கோவிலில் நமக்கு நிறைய வேலை இருக்கிறது!
கழுகு கோவிலில்-
கிறிஸ்டோபர்! இந்த அலுமினியப் பறவையை வைத்து என்ன செய்யப் போகிறாய்?
பேசாமல் வேலையை பார்!

கிறிஸ்டோபர் அலுமினிய தகட்டை வைத்து இராட்சத கழுகுப் பறவை ஒன்றை செய்தான்.
இதை வைத்து என்ன செய்யப் போகிறாய்?
உன் தலைவரிடம் போ! அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று சொல்வார்!


இன்றைக்கு கழுகு தெய்வம் நெருப்புடன் வரப் போகிறது!
இவனுக்கு வேறு வேலை இல்லையா?
உங்கள் கிராமத்தை நாசமாக்கப் போகிறது!
குரு மோகி என்ற கிராமத்திற்குச் சென்று ஆக்ரோஷமாகப் பேசினார்.


கழுகு கோவிலில்– இராட்சத அலுமினிய கழுகுப் பறவை தயாராகிக் கொண்டிருந்தது.
தாஸ்! இந்தக் கலர் பெயிண்ட் இருட்டில் கூட பிரகாசமாக தெரியம்!
எனக்கு ஒன்றும் புரியவில்லை!


வைக்கோலை கட்டுக் கட்டாக கொண்டுவந்து போட்டார்கள்.
இங்கே கொண்டுவந்து போடுங்கள்!

அங்கே போட்டுவிட்டுச் செல்லுங்கள்! பிறகு நான் பார்த்துக் கொள்கிறேன்!


இன்று இரவு கழுகு தெய்வம் நெருப்பைக் கக்கி உங்களை அழிக்கப் போகிறது!
கழுகாவது... நெருப்பாவது! போ கிழவா?

டேய் அடிங்கடா?
விடாதே குத்து...!
இதற்கெல்லாம் நீங்கள் தண்டனை அடைந்தே தீரவேண்டும்!
குரு, கிராமம் கிராமமாக போய் பிரசாரம் செய்து அடிவாங்கி கட்டிக்கொண்டார்.


கழுகு கோவிலில் கிறிஸ்டோபர் கெலிகாப்டரை கொண்டுவந்து நிறுத்தியிருந்தான்.
தாஸ்...! சங்கிலியை இறுக்கமாக கட்டிவிட்டு நீ ஆற்றங்கரையில் காத்திரு!
நீங்கள் வைக்கோலை பறவையின் காலில் கட்டுங்கள்!

மோகி கிராமத்தில்—
குரு ஏன் இப்படி கத்திவிட்டுச் செல்கிறார்?
அவர் ஒரு ஏமாற்றுக்காரர். புத்தி பேதலித்து விட்டது!
நீ ஏன் அதையே நினைத்துக் கொண்டிருக்கிறாய்...?
நடு இரவு— மோகிக் கிராமம் ஆழ்ந்த நித்திரையில் இருந்தது. அப்போது ஏதோ ஒன்று பறந்து வரும் சத்தம் கேட்டு ஊரே விழித்துக்கொண்டது.
அனைவரும் பதட்டத்துடன் வெளியே வந்து எட்டிப் பாத்தார்கள்.
ஆ...! கழுகு தெய்வம் வருகிறது!
?
?
வானத்தில்— அலுமினியப் பறவை காலில் நெருப்பை அள்ளிக்கொண்டு சீற்றத்துடன் பறந்து வந்தது.
மக்கள் பீதியடைந்து தலைதெறிக்க நாலாபுறமும் ஓடினார்கள்.
உண்மையிலேயே இது கழுகு தெய்வந்தான்...!
அய்யோ நெருப்பை வேறு அள்ளி வருகிறதே!
நான்தான் அப்பொழுதே சொன்னேனே கேட்டீர்களா?
அந்த சமயம் பார்த்து குரு அங்கே வந்தார்.

கிறிஸ்டோபர் கெலிகாப்டர் உதவியுடன் அந்த அலுமினியப் பறவையை பறக்க வைத்துக்கொண்டிருந்தான். பறவையின் காலில் வைக்கோலைக் கட்டி தீ வைக்கப்பட்டிருந்தது.
இருளில் கெலிகாப்டர் தெரியவில்லை.
கிராமத்து மக்கள் உண்மையிலேயே கழுகு தெய்வம் என்று நம்பினார்கள்.
ஓடுங்கள்!
இன்று கழுகு தெய்வம் வந்து உங்கள் கிராமத்தை அழிக்கப் போகிறது என்று சொன்னதற்கு என்னை ஏளனம் செய்தீர்களே!
அய்யோ! நெருப்பை கொட்டி விட்டதே!
அய்யோ நம் கிராமத்திற்கு தெய்வப் பழி வந்து விட்டதே...!
கழுகின் காலில் இருந்த நெருப்புப் பந்தம் விடுபட்டு கீழே விழுந்தது.
நெருப்புப் பந்தம் சரியாக ஒரு வீட்டு கூரையின் மீது விழுந்ததும் வீடு தீப்பிடித்துக்கொண்டது
அய்யோ...!!

அனைவரும் ஓடிவிடுங்கள்! இல்லை உங்களையும் அழித்துவிடப் போகிறது!
வாருங்கள். தப்பி விடலாம்!
அந்தக் கிராமமே தீக்கு இரையாகிக் கொண்டிருந்தது.
அதேநேரம்– தாஸ், காட்டாறில் கட்டுமரத்துடன் தயாராக நின்றுகொண்டிருந்தான்.
சரி! நாம் புறபபடுவதற்கு இதுதான் சரியான நேரம்!

கிறிஸ்டோபர்
பரவாயில்லை!
அசத்தி
விட்டான்!

நெருப்பை திரும்பிப்
பார்க்காதீர்கள். உங்கள்
கண் குருடாகிப்போய்விடப்
போகிறது! ஓடுங்கள்!
குரு, அனைவரையும் கிராமத்தைவிட்டு
விரட்டுவதிலேயே குறியாக இருந்தான்.

ஹெலிகாப்டரில்–
என் வேலை முடிந்து
விட்டது! அடுத்து தாஸ
புல்டவுசரை கொண்டுபோய்
கிராமத்தை தரைமட்ட
மாக்க வேண்டும்!


அதேநேரம்– தாஸ் புல்டவுசரை கட்டுமரத்தில் ஏற்றி கிராமத்திற்கு கொண்டு வந்தான்.
கிராமத்தில்
இருந்தவர்கள்
எல்லாம் ஓடி
விட்டார்களா?
அனைவரும்
காட்டுக்குள் சென்று
விட்டார்கள்!

தாஸ் புல்டவுசரை கிராமத்தில் இறக்கி எரிந்து கொண்டிருந்த விடுகளை எல்லாம் நொறுக்கி காட்டாறில் தள்ளினான்.
ஐந்து நிமிடத்தில் அந்த இடத்தில், ஒரு கிராமம் இருந்ததற்கான சுவடே இல்லாமல் செய்துவிட்டான்.
திரும்பவும் கழுகின் காலில் வைக்கோலை வைத்துக் கட்டி நெருப்பை பற்ற வைத்தார்கள்.
கிறிஸ்டோபர்! தீ வைத்துவிட்டேன்! புறப்படலாம்!
அடுத்த நிமிடம்— அலுமினியப் பறவை நெருப்புப் பந்தத்துடன உயரே பறந்தது.
அங்கே பாருங்கள்! கழுகு தெய்வம் உங்கள் கிராமத்தையே தூக்கிக்கொண்டு போகிறது!
ஆமாம்!
நீங்கள் ஏதோ பாவம் செய்திருக்கிறீர்கள். அதனால்தான் கழுகு தெய்வம் உங்கள் மீது கோபப்பட்டு கிராமத்தை அழித்து விட்டது!
குரு கிராமத்து மக்களிடம் சரளமாக கதை விட்டுக்கொண்டிருந்தான்.

அய்யோ! என் வீடு பறிபோய் விட்டதே!
தெய்வமே! நாங்கள் என்ன பாவம் செய்தோம்!
கழுகு கிராமத்தை தீக்கிரையாக்கி விட்டு பறந்து சென்றது.
காலன், தன் வேலையை முடித்துவிட்டு புல்டவசரை கட்டுமரத்தில் ஏற்றி அப்புறப்படுத்தினான்.
கழுகு மறைந்ததும் காட்டுக்குள் இருந்த மக்கள் ஓடிவந்தார்கள்.
இங்கிருந்த என் வீட்டைக் காண வில்லை!
மக்கள் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டார்கள்.
அய்யோ... கிராமமே நெருப்புக்கு பலியாகி விட்டதே!

இனிமேல் தெய்வம் உங்களை தண்டிக்காமல் இருக்க வேண்டு மானால் தெய்வத்திற்கு காணிக்கை செலுத்த வேண்டும்!
தெய்வமே! காணிக்கை செலுத்திவிடு கிறோம்! எங்களை விட்டுவிடு!
கழுகு தெய்வம் மோகி கிராமத்தை தீக்கிரையாக்கி விட்டது!
டம்....
டம்....
முரசு கொட்டுபவன் செய்தியை பரப்பினான்.
கிறிஸ்டோபர் தன் வேலையை முடித்துவிட்டு கழுகை கோவிலில் இறக்கினான்.
தாஸ்! என்னுடைய திட்டம் எப்படி?
உண்மையிலேயே நீ பலே கில்லாடிதான்!

மோகி கிராமம் தீக்கிரையான செய்தி காட்டுத் தீ போல பரவியது.
கழுகு தெய்வம் மோகி கிராமத்தை பழிவாங்கிவிட்டது.
ஒவ்வொரு கிராமத்திலும் இதே பேச்சாக இருந்தது.
வாருங்கள்! நாம் போய் மோகி கிராமத்தை பார்த்து வரலாம்!
இதைப்போல காட்டின் எல்லா பகுதியில் இருந்தும் மோகி கிராமத்தை பார்க்க ஆர்வத்துடன் வந்தார்கள்.
தலைமை குரு—
தீக்கிரையான கிராமத்தை மீண்டும் உருவாக்க விடக்கூடாது. அது புனிதமான இடம்! கழுகு தெய்வத்திற்குச் சொந்தமானது என்று மற்றவர்களுக்குப் புரியும்படி சொல்லுங்கள்!
இந்த இடத்தில்தான் கிராமம் இருந்தது. காணவில்லையே!
கேள்விப்பட்டதெல்லாம் உண்மைதான்!
பல இடங்களில் இருந்து வந்தவர்கள் அதிசயித்துப் போனார்கள்.

அதிலிருந்து குருக்களுக்கு தனி மரியாதை கிடைக்க ஆரம்பித்தது.
முன்பு போலவே பொற்காசுகள் குவியத் தொடங்கின.
கழுகு கோவிலில் உள்ள கஜானா அறை நிரம்பின.
தாஸ்! இதில் நமக்கு பாதி பங்கு உண்டு!
அப்படியானால் நாம் இனி லட்சாதிபதிதான்!
பாழடைந்துகிடந்த கழுகு கோவில் புதுப்பிக்கப்பட்டது.
வா தாஸ்! தலைமை குருவை போய் பார்த்து விட்டு வரலாம்!
தலைவரை இன்று பார்க்க முடியாது! நாளை வாருங்கள்!
நேற்றும் இதைத்தானே சொன்னீர்கள்!
மாயாவி குகையில்—
உண்மை மாயாவியாரே! கழுகுப் பறவை மோகி கிராமத்தை அழித்ததை ஆயிரம்பேர் கண்கூட பார்த்திருக்கிறார்கள்!
ஒரே குழப்பமாக இருக்கிறது!

தெய்வம் கழுகு வடிவில் வந்து பாவம் செய்த கிராமத்தையெல்லாம் முன்பு போலவே அழிக்கத் தொடங்கிவிட்டது!
எங்கு பார்த்தாலும் இதே பேச்சாகத்தான் இருந்தது.
எல்லா கிராமங்களிலும் கழுகு தெய்வத்திற்கு காணிக்கை சேர்ந்தது.
நான் போய் அந்தக் கிராமத்தை பார்த்து விட்டு வரு கிறேன்!
மாயாவி குதிரையில் ஏறிப் புறப்பட்டார்.
ஓர் இடத்தில்—
கழுகு தெய்வத்திற்கு தீக்கிரையான மோகி கிராமம் இங்கேதானே இருந்தது!
ஆ... மாயாவி!
ஆமாம் மாயாவி!

கழுகு வந்து நெருப்பை போட்டுவிட்டுச் சென்றதெல்லாம் உண்மைதானா?
நாங்கள் எங்கள் கண்களாலே பார்த்தோமே!
கழுகு தெய்வம் கிராமத்தை தூக்கிச் செல்லும்போது சில வீடுகள் ஆற்றில் விழுந்துவிட்டன பாருங்கள்!
கிராமம் முழுவதையும் தூக்கிச் சென்று எரிமலையில் போட்டிருக்கும்!
மாயாவி ஆற்றில் குதிரையுடன் இறங்கினார்.
அந்தப் பக்கம் போகாதீர்கள்! அது கழுகு தெய்வத்தின் புனித இடமாம்!
நாங்கள் யாரும் அந்த இடத்தில் குடிசை போடக்கூடாது என்று தலைமை குரு சொல்லி விட்டார்!
மாயாவி குதிரையில் இருந்து இறங்கினார்.
அப்படியே சுற்றிலும் நோட்டமிட்டார்.
இது என்ன... ஏதோ வண்டியின் டயர் தடம் போலிருக்கிறதே!
மாயாவியின் கம்ப்யூட்டர் மூளைக்கு சின்ன துப்பு கிடைத்தது.

அதே நேரம் கழுகு கோவிலில்-
தலைவரை பார்க்க ஒரு வாரம் ஆகுமா?
கஜானாவை தனியாக சுருட்டப் பார்க்கிறானா?
அவர் முக்கிய வேலையாக இருக்கிறார்
ஆ...!
கிறிஸ்டோபர் அவனை எட்டி மிதித்தான்.
கிறிஸ்டோபர் நேராக தலைமை குருவிடம் வந்தான்.
உனக்கு செல்வாக்கு பெருகியதும் எங்களை மறந்து விட்டாய்...!
இல்லை! நான் உங்களை எப்படி மறப்பேன்!
கிறிஸ்டோபர் துப்பாக்கியை கையில் எடுத்தான்.
நம் ஒப்பந்தப்படி, எனக்குச் சேரவேண்டிய பாதிப் பங்கை மரியாதையாக எனக்கு கொடுத்துவிடு!
ஆத்திரப்படாதே! எவ்வளவு கிடைத்திருக்கிறது என்று பார்த்துவிட்டு பாதியாக பிரித்துக் கொள்வோம்! போய் ஒய்வெடுங்கள்! காலையில் பேசலாம்!

தலைமை குரு அவர்களை அனுப்பிவிட்டு தன் ஆட்களை அழைத்தார்.
இரவு அவர்கள் தூங்கியதும், கட்டித் தூக்கி வந்துவிடுங்கள்!
தலைமை குரு வேறு ஒரு திட்டம் போட்டார்.
தாசும், கிறிஸ்டோபரும் கழுகு கோவிலில் ஓய்வெடுத்தார்கள்.
கிறிஸ்டோபர்! தலைமை குரு நம்மை ஏமாற்றப் பார்க்கிறார்!
தாஸ்! நம்மை யாரும் அவ்வளவு சீக்கிரத்தில் ஏமாற்றிவிட முடியாது! பேசாமல் தூங்கு!
சிறிது நேரத்திற்கெல்லாம், தலைமை குரு ஏவிவிட்ட ஆட்கள் பூனை போல மெதுவாக பதுங்கி வந்தார்கள்.
அதேநேரம்- மாயாவி பக்கத்து கிராமங்களுக்குச் சென்று விசாரித்தார்.
மாயாவியாரே! மருந்து வாங்கக்கூட கையில் காசில்லை! எல்லாவறறையும் கழுகு தெய்வத்திற்கு போட்டு விட்டோம்...!
உங்கள் தேவையை பூர்த்தி செய்தபிறகு எஞ்சியதை காணிக்கை செலுத்தினால் என்ன?
இல்லை மாயாவியாரே! நாங்கள் தெய்வப் பழிக்கு ஆளாக விரும்பவில்லை!

மாயாவி அவர்களிடம் விடைபெற்றுச் சென்றார்.
பழங்கதை மீண்டும் திரும்புகிறது! ஒருவேளை இது குருக்களின சூழ்ச்சியாகக் கூட இருக்கலாம்!
இரவோடு இரவாக புல்டவுசரை வைத்து கிராமத்தை சுத்தம் செய்துவிட்டார்களா! ஆனால்... கழுகு எப்படி வந்தது?
மாயாவி யோசித்தார்.
மாயாவி நேராக எரிமலை பகுதியில் இருக்கும் கழுகுக் கோவிலுககு வந்தாா.
இங்கே ஏதாவது உண்மை கிடைக்கக் கூடும்!
கோவிலின் உள்ளே- கிறிஸ்டோபரையும், தாசையும் கட்டி வைத்திருந்தாாகள்.
நீ எங்களை ஏமாற்றி விட்டாய்!
நானா? இரணடு நாளாக உன் நட வடிக்கைதான் சரியில்லை! நீதான் எங்களை ஏமாற்றப் பார்க்கிறாய்....
டெவில், டைகர் நீங்கள் இருவரும் இங்கேயே இருங்கள்! நான் இதோ வந்து விடுகிறேன!

மாயாவி மெதுவாக கழுகு கோவிலுக்குள் வந்தார்.
ஓர் அறையை திறந்து பார்த்தவர், அதிர்ச்சி அடைந்தார்.
அறைக்குள்—
கெலிகாப்டர் இருக்கிறது! கழுகு கோவிலில் இதற்கென்ன வேலை?
அருகில் இருந்த மற்றொரு அறையை திறந்தார். உள்ளே...
ஆ... இது என்ன அலுமினியப் பறவை. பார்ப்பதற்கு கழுகுத் தெய்வம் மாதிரி அல்லவா இருக்கிறது!

?
வெளியில் சலசலப்பு கேட்டதும், மாயாவி வெளியே எட்டிப் பார்த்தார்.
கிறிஸ்டோபரையும், தாசையும் குருக்கள் பலத்த காவலுடன் அழைத்துச் சென்றார்கள்.
இருவரையும் கழுகுச் சிலை முன் கொண்டுவந்து நிறுத்தினார்கள்.
எங்களுக்கு எதுவும் வேண்டாம் எங்களை விட்டு விடுங்கள்!
உங்களை விட்டு விடுவதா?
வெளியே விட்டால் எங்களைப் பற்றிய இரகசியங்களை சொல்லிவிடுவீர்கள்!
தலைவரே! எங்களை கொன்று விடாதீர்கள்!
இருவரையும் ஒரு மரப் பெஞ்சில் படுக்க வைத்து கட்டிப் போட்டார்கள்.
இதோ, எங்கள் தெய்வத்தின் தூதர்கள் வந்து விட்டார்கள். இவைகளே உங்களை கவனித்துக் கொள்ளும்!
ஆ! கழுகுகள் வட்டமிடு கின்றனவே!
மாயாவி மறைந்திருந்து நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.
எங்களை தனியே விட்டுப் போகாதீர்கள்! காப்பாற் றுங்கள்!
இருவரும் பயத்தில் அலறினார்கள்.


பக்கத்து கிராம மக்கள் அனைவரையும் உடனே மோகி கிராமத்துக்கு வரச் சொல்லுங்கள்! நான் அவர்களுடன் பேசவேண்டும்!
தலைமை குரு கட்டளையிட்டார்.
அங்கே- கழுகுகள் தன் கொடூர பசியை தீர்த்துக்கொள்ள நேரம் பார்த்துக் கொண்டிருந்தன.
தலைமை குரு கட்டளைப்படி பக்கத்து கிராமங்களுக்கு செய்தி சென்றது.
உங்களை தலைமை குரு பார்க்க வேண்டுமாம். உடனே மோகி கிராமத்துக்கு செல்லுங்கள்!
சிறிது நேரத்தில் தலைமை குரு மோகி
திற்குப் புறப்பட்டார்.
தலைவரே! அனைவரும் வந்து விட்டார்கள்!
நல்லது!

கிறிஸ்டோபர்! இப்படி அநியாயமாக கழுகுகளிடம் கொத்துப்பட்டு சாகப் போகிறோமே!
முதலில் கண்ணைத்தான் கொத்தும்! அய்யோ கழுகு என்னை நோக்கி அல்லவா வருகிறது!
உங்களை அவ்வளவு எளிதில் நான் சாகவிட்டு விடுவேனா!
?
யாரது...!
மாயாவி அவர்களை நோக்கி வந்தார்.
நீங்கள் யார்? உங்களை யார் இங்கு கட்டிப் போட்டது!
படார்...!
!
அய்யோ! என்னால் நிற்கக்கூட முடிய வில்லையே!
எனக்கும் அப்படித்தான் இருக்கிறது!
மாயாவி கழுகுச் சிலையின் வயிற்றுப் பகுதியில் மண்டை ஓட்டுக்குறியை பதித்துவிட்டு, அவர்கள் இருவரையும் தூக்கிக்கொண்டு நடந்தார்.

மோகி கிராமத்தில்
மோகி கிராமம் தெய்வ அருள் பெற்றது. இங்கு நம் தெய்வம் குடிகொண்டுள்ளது. யாரும் அஜாக்கிரதையாக இருந்துவிடாதீர்கள்!
அப்போது தலைமை குரு அங்கே வந்தார்.
மாயாவி அவர்கள் இருவரையும் கீழே கொண்டு வந்தார்.
எங்களை எங்கே கொண்டு போகிறாய்?
முதலில் எங்களுக்கு சாப்பிட ஏதாவது கொடு! மிகவும் சோர்வாக இருக்கிறது!
BARRY 5/3
இங்கே கொஞ்ச நேரம் இருங்கள். இதோ வந்துவிடுகிறேன்.
காவலாளி ஒருவன் நிற்பதைப் பார்த்த மாயாவி அவர்கள் இருவரையும் கீழே இறக்கிவிட்டார்.

கண்ணிமைக்கும் நேரத்திற்குள் மாயாவி காவலாளி மீது பாய்ந்து அவனை திக்குமுக்காடச் செய்தார்.
அதைப் பார்த்ததும் மேலும் இரண்டு காவலாளிகள் மாயாவியை நோக்கி ஓடிவந்தார்கள்.
மாயாவி இருவரையும் தூக்கி சுழற்றி அடித்தார்.
கிறிஸ்டோபர்! யாரது?
தெரியவில்லை! ஆனால் நமக்கு உதவ வந்திருக்கிறார் என்பது மட்டும் புரிகிறது!
தலைமை குருவையும் மற்றவர்களையும் எங்கே?
மோகி கிராமத்திற்குச் சென்றிருக் கிறார்கள்!

மோகி கிராமத்தில்—
கழுகு தெய்வத்தின் சக்தியை இதுவரை யாரோ சொல்லித்தான் கேள்விப்பட்டு இருந்திருப்பீர்கள்! ஆனால், நேற்று நேரில் பார்த் திருப்பீர்களே?
பார்த்தோம்!
கோவிலுக்குள் இன்னும் ஒரு காவலாளி இருக்கிறான். அவன் கதையையும் முடித்துவிட்டு வந்து விடுகிறேன்!
ஒன்றும் அவசரம் இல்லை! நீங்கள் வந்தால்தான் எங்களால் நடக்க முடியும்!
அடுத்த நிமிடம்— காவலாளி ஒருவன் கையில் ஈட்டியுடன் மாயாவியை நோக்கி பாய்ந்து வந்தான்.
படார்...!
ஒரே அடி அவன் மயங்கி விழுந்தான்.


மாயாவி இருவருக்கும் சாப்பிட பழங்கள் கொடுத்தார்.
ரொம்ப நன்றி! பசி அடங்கி விட்டது! நீங்கள் யார்?
அது இருக்கட்டும்! எனக்கு உங்களையும் தெரியும். உங்கள் அலுமினியப் பறவையைப் பற்றியும் தெரியும்!


இப்போது; நான் சொல்கிற திட்டப்படி நீங்கள் நடக்க வேண்டும்!
சொல்லுங்கள்! கண்டிப்பாக செய்கிறோம்!
இவன் என்ன செய்யப் போகிறானோ தெரியவில்லை!

மாயாவி கஜானா அறையை பார்வையிட்டார்.
அருமையான திட்டம்! நான் தயார்! ஆனால் இதில் பாதியை எனக்கு கொடுத்துவிட வேண்டும்!
கொடுத்துவிட்டால் போகிறது!
அப்பாடி...!

மோகி கிராமத்தில்-
உங்களுக்கு கிடைக்கும் விளைச்சலில் பாதியை கழுகு கோவிலுக்கு கொடுத்து விட வேண் டும்!
அப்படியே செய்கிறோம்!
அதைப் போல, 50 வயதுக்கு கீழ் உள்ள ஆண்கள் ஆறு மாதத்திற்கு கோவிலுக்காக் உழைக்க வேண்டும்!
சரி!
தலைவரே அங்கே பாருங்கள்!
அப்போது கழுகு தெய்வம் பயங்கர இரைச்சலுடனும், நெருப்புடனும் பறந்து வந்தது.
ஆ...! இது எப்படி?
ஆ....
குருக்கள் அனைவரும் வெலவெலத்துப் போனார்கள்.
அலுமினியப் பறவை ஆள் இல்லாமல் எப்படி பறக்க முடியும்!
அதுதான தெரியவில்லை! யாரோ ஒருவன் நம் திட்டத்தை அம்பலப்படுத்தப பார்க்கிறான்!
அவர்கள் இருவரும்தான் இந்நேரத்துக்கு கழுகுகளுக்கு இரையாகியிருப் பார்களே!

ஹெலிகாப்டரில்- மாயாவியின் கட்டுப்பாட்டுக்குள் கிறிஸ்டோபரும், தாசும் இருந்தார்கள்.
எல்லாம் என் திட்டப்படியே நடக்கிறது! நான் இப்போது கீழே குதிக்கப் போகிறேன்! சொன்னது நினைவிருக்கட்டும்!
சரி!
மாயாவி ஹெலிகாப்டரில் இருந்து கீழே குதிக்க தயாரானார்.
யார் இவர்? உயிரை பணயம் வைத்து ஒவ்வொரு செயலிலும் ஈடுபடுகிறாரே!
அலுமினியப் பறவை மோகி கிராமத்தையே சுற்றிச் சுற்றி வந்தது.
திடீரென்று மாயாவி வானத்தில் இருந்து குதிப்பது போல் குதித்தார்.
ஆ... மாயாவி! மாயாவி!

தொடர்ந்து நடந்த குழப் பங்களைக் கண்டு தலைமை குரு ஆடிப் போனார்.
அன்பானவர்களே! இந்த குருக்கள் எல்லாம் கழுகு பெயரைச் சொல்லி ஏமாற்றுகிறார்கள்! நம்பாதீர்கள்!
அப்படியானால் இந்த பறவை?
இல்லை! இவன் பொய் சொல்கிறான்!
உடனே மாயாவி வானத்தை நோக்கிச்சுட்டார்.
டுமீல்...!
அடுத்த நிமிடம்– கெலிகாப்டர் விமானம் வெகு தாழ்வாக பறந்தது.
கெலிகாப்டர் விமானம் அலுமினிய பறவையை கட்டி இழுத்து வருவதை கூடியிருந்த மக்கள் பார்த்து அதிசயத்துப் போனார்கள்.





மாயாவி நடநததை விளக்கமாக எடுத்துச் சொன்னார்.

மக்கள் கொதித்தெழுந்தார்கள் கையில் அகப்பட்டதை தூக்கிக் கொண்டு பாய்ந்து வந்தார்கள்
நிறுத்துங்கள்!
குருக்கள் எவனையும் உயிரோடு விடக்கூடாது!
இல்லை! இவர்கள் எங்களை முட்டாளாக்கி விட்டார்கள்!
கிராமத்தை அழித்த இவர்களை உயிரோடு விடக்கூடாது!
நான் சொல்வதைக் கேளுங்கள்! அமைதியாக இருங்கள்!
மாயாவி மக்களை சாந்தப்படுத்தினார்.
கிறிஸ்டோபர்! கதை வேறு பக்கம் செல்கிறது! முகமூடிக்காரன் நம்மை விடமாட்டான் போலிருக்கிறது!
தாஸ்! உள்ளே வா! நாம் தப்பி விடலாம்!

உங்களுக்கு ஏற்பட்ட இழப்பை நான் ஈடுசெய்து தருகிறேன்! எரிந்துபோன கிராமத்தை தலைமை குரு புதிதாக உருவாக்கித் தருவார்!
கிறிஸ்டோபர்! நாம் இனி ஒரு நிமிடம் கூட இங்கே இருக்கக் கூடாது!
நாம் கழுகு கோவிலுக்கு செல்வோம்!
இவர்கள் கோவிலுக்கு வர அரை மணி நேரம் ஆகும். அதற்குள் கஜானாவை சூறையாடி விடலாம்!
புல்டவுசரை உங்கள் கிராமத்துக்கு தந்துவிடுகிறேன். பயன்படுத்திக் கொள்ளுங்கள்!
அப்போது கிறிஸ்டோபரும், தாசும் கெலிகாப்டரை கிளப்பினார்கள்.
கோவிலுக்குச் சென்று கஜானாவை கொள்ளையடிக்கப் போகிறார்கள்! விடமாட்டேன்!
மாயாவி கெலிகாப்டரை பிடிக்க ஓடினார்.
கெலிகாப்டரில் இருந்து தொங்கிக் கொண்டிருந்த கம்பியை பிடிக்க மாயாவி பாய்ந்தார்.

மாயாவியாரே...
மாயாவியாரே!
கெலிகாப்டர் கொஞ்சம் கொஞ்சமாக உயரே பறக்க ஆரம்பித்தது. மாயாவி கம்பியை பிடித்து மெதுவாக மேலேறினார்.
கிறிஸ்டோபர்! அங்கே பார்! முகமூடிக்காரன் கம்பியை பிடித்து மேலேறி வருகிறான்!
தாஸ்! கமபியை உடனே வெட்டிவிடு!
பறவையை கட்டி இழுத்து வந்த கம்பி தொங்கிக் கொண்டு வருகிறதல்லவா? அதில் ஏதாவது சிக்கியிருக்கும்!
என்ன விமானம் கீழேயே போகிறது?
ஆமாம்...!

இல்லை கிறிஸ்டோபர்! அவர் நம்மை காப்பாற்ற வருகிறார் என்று நினைக்கிறேன்!
டேய்! அவன் வந்தால் கஜானாவை கொள்ளையடிக்க முடியாது!
கிறிஸ்டோபர் கெலிகாப்டரை தாழ்வாக பறக்கச் செய்து மாயாவியை ஆற்றுக்குள் மூழ்கச் செய்தான்.
தொபீர்...
மாயாவியை ஆற்றில் மூழ்கடித்தே இழுத்துச் சென்றான்.
ஆ...! மாயாவி...!
மாயாவி தன் பலம் முழுவதையும் திரட்டி கம்பியை பிடித்து மேலேறினார்.
இப்பொழுது என்ன செய்வது?
அவன் மேலேறி வருவதற்குள் அவன் கதையை முடிக்க வேண்டும்!
இப்பொழுது பார்! மரக்கிளைகளில் அடிப்பட்டு முகமூடிக்காரன் சின்னா பின்னமாகப் போகிறான!


கிறிஸ்டோபர் கெலிகாப்டரை அடர்ந்த மரங்கள் நிறைந்த பகுதிக்கு ஓட்டிச் சென்றான்.
மாயாவி மரங்களுக்கு ஊடே தொங்கிக் கொண்டு வந்தார். கிளைகள் அவர் உடலை பதம் பார்த்தாலும், அவர் மனம் தளரவில்லை.

கிறிஸ்டோபர்! அவன் மரக்கிளைகளில் மோதி உயிரை விட்டிருப்பான்!
அவன் உடனே சாகக் கூடாதே!

கிராமத்து மக்கள் தூரத்தில் இருந்தபடியே நடப்பதை வேடிக்கைப் பார்த்து கொண்டிருந்தார்கள்.
அய்யோ மாயாவியாரே!
ஏய்... நிறுத்துடா...!

மாயாவி ஒரு மரத்தை இறுகப் பிடித்துக் கொண்டார்.
டேய்! என்னையா சாகடிக்கப் பார்க்கிறாய்! அது நடக்காதுடா...?
மாயாவி துரிதமாக செயல் பட்டு, அந்தக் கம்பியை ஒரு மரத்தில் சுற்றி இறுக்கினார்.
நச்...! நச்...!
ஆ... அம்மா...!
ஆ...! என் முதுகு போச்சே!
அடுத்த விநாடி கெலிகாப்டர் பிரேக் போட்ட மாதிரி டக் கென்று நின்று குலுங்கியது.
தொடர்ந்து பறக்க முடியாமல் திணறியது.
அடர்ந்த மரக்கிளைகளில் சிக்கி கெலிகாப்டர் தீப்பிடித்தது..
மாயாவி! மாயாவி!

கெலிகாப்டருக்குள் இருந்த இருவரும் வெலவெலத்துப் போனார்கள்.
அய்யோ தீப்பிடித்து விட்டதே!
கிறிஸ்டோபர் மெதுவாக வெளியே வந்தான்
கிறிஸ்டோபர்! என்னைக் காப்பாற்று! என் கால் மாட்டிக் கொண்டது!
தாஸ்! நீயேதான் உன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்!
கிறிஸ்டோபர் மரக்கிளைகளை பிடித்து மடமடவென்று இறங்கினான்.
நல்லவேளை நான் பிழைத்துக் கொண்டேன்!
அதற்குள் மாயாவி கெலிகாப்டருக்குச் சென்று இடிபாடுகளுக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த தாசை வெளியே கொண்டு வந்தார்.
பயப்படாதே! உனக்கு ஒன்றும் ஆகவில்லை! பெட்ரோல் டேங்க் தீப்பிடிப்பதற்குள் வா இறங்கி விடுவோம்!
ஆ...ஆ....!

மாயாவி தாசை கீழே கொண்டு வருவதற்
கும். கெலிகாப்டர் வெடித்துச் சிதறுவதற்
கும் சரியாக இருந்தது.
அய்யோ பாவம்! தாஸ் அநியாயமாக பலியாகிவிட்டான்! அவன் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கிறேன்!
இனி கோவிலுக்குச் செல்ல வேண்டியதுதான்!
கிறிஸ்டோபர் நேராக கஜானா அறைக்கு வந்தான்.
ஆகா! இங்கே யாருமில்லை! இத்தனை செல்வங்களும். எனக்குத்தான்!
இதை வைத்துதான் புதிய வாழ்க்கையை தொடங்க வேண்டும்!
கிறிஸ்டோபர் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கும்போது அங்கே மாயாவி வந்தார்.

மாயாவி தாசை கூட்டிக்கொண்டு உள்ளே வந்தார்.
கிறிஸ்டோபர்! நான் சாகவில்லை!
தாஸ்...! நீயா...?
அதற்குள் மாயாவி அவன் பிடறியில் ஓங்கி ஒரு போடு போட்டார்.
ஆ...!
டமார்!
டேய்! உன் கூட்டாளி உன்னைப் பற்றிய எல்லா உண்மைகளையும் சொல்லிவிட்டான்!
சாகக் கிடந்த என்னை அம்போ என்று விட்டுவிட்டான்!
உங்கள் இருவரையும் ஒப்படைக்க வேண்டிய இடத்தில் ஒப்படைத்து விடுகிறேன்! அதுதான் நல்லது!
என்னை விடுங்கள்!


மாயாவி அனைத்து கிராமத்து மக்களையும் கோவிலுக்கு அழைத்தார்.
கஜானாவில் இருந்த செல்வங்களை எல்லாம் மக்களுக்கு கொடுக்க மாயாவி ஏற்பாடு செய்தார்.
சிறைச்சாலையில்–
வெளியே போனால் நம்மால் ஏமாற்றப்பட்டவர்கள் நம்மை கொன்று விடுவார்கள்! அதனால் இங்குதான் நமக்கு பாதுகாப்பு!
மக்கள் எல்லாம் முன்பு போலவே கழுகு தெய்வத்தை அலட்சியப் படுத்தத் தொடங்கிவிட்டார்கள். கழுகு கோவிலை யாருமே கண்டுகொள்வதில்லை!
(முடிந்தது)

கண்டுபிடியுங்கள் - 32

ரூ. 500 பரிசு!

கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களை உற்றுப் பாருங்கள். அவற்றின் பெயர்களில் இருந்து ஓர் எழுத்தை மட்டும் எடுத்து ஒன்று சேருங்கள். கிராமியக் கலை ஒன்று கிடைக்கும். அது எந்தக் கலை? கண்டுபிடிப்பவர்களுக்கு ரூ. 500 பரிசு காத்திருக்கிறது!

அது எந்தக் கலை? என்பதை (பெயரை மட்டும்) ஓர் அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புங்கள். முகவரி எழுதவேண்டிய இடத்தில், இத்துடன் உள்ள முகவரி கூப்பனை வெட்டி ஒட்ட வேண்டும்.

சரியான விடை எழுதியவருக்கு ரூ. 500 பரிசு

கொடுக்கப்படும்! பலபேர் சரியான விடை எழுதியிருந்தால், பரிசுக்கு உரியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்து எடுக்கப்படுவார்கள்.

முடிவு தேதி: 28–6–91.

அனுப்ப வேண்டிய முகவரி:-

கண்டுபிடியுங்கள்,
"ராணி காமிக்ஸ்",
சென்னை-600 007.

கண்டுபிடியுங்கள் - 30

பரிசு பெற்றவர்கள்:-

மே 16-ந்தேதி வெளியான "ராணி காமிக்ஸ்" கண்டுபிடியுங்கள் போட்டியின் விடை:- தெனாலிராமன்.

நூற்றுக்கணக்கானோர் சரியான விடை எழுதியிருந்ததால், பரிசுக்குரிய 25 பேரை குலுக்கல் முறையில் தேர்ந்து எடுத்தோம்.

பரிசுத்தொகை ரூ. 500, ஆளுக்கு ரூ. 20 விதம் பிரித்துக் கொடுக்கப் பட்டது.

பரிசு பெற்றவர்கள்:-

(1) வி. உமாதேவி, சென்னை-21. (2) டி. ராஜ்குமார், விருதுநகர். (3) எம். செல்வி, மேல கபிஸ்தலம். (4) எம். முகமது இஸ்மாயில், திருவாரூர். (5) குமார், கோவை-7.

(6) பி. ஹேமா, விழுப்புரம். (7) எஸ். வெங்கடேசன், வேலூர்-1. (8) ஆர். சவும்யா, புதுக்கோட்டை. (9) எம்.ஏ. அப்துல் ரகுமான், கூத்தாநல்லூர். (10) ஆர். அங்கவை, திருவத்திபுரம்.

(11) எல். சித்திக் முகமது, திருவாரூர். (12) எஸ்.ஆர். மகேசுவரி, டெல்லி. (13) மு. கஜபதி, புதுச்சேரி. (14) வி. கல்பனா, மணப்பாறை. (15) ஆர். பாலமுருகன், கந்தகுமாரன்.

(16) ஆர். ரேவதி, இழுப்பூர். (17) என். ஆனந்த், நாகர் கோவில். (18) எம்.ஐ. முகம்மது பாத்திமா, கடையநல்லூர். (19) ஜி. பாபு, தேசூர். (20) ஆர். வசந்தி, மதுரை-7.

(21) கே. பூபதி, சிங்கம்பேட்டை. (22) டி. மீனா, காஞ்சிபுரம். (23) வ. கோபால், முக்காணி. (24) பி. வேதலெட்சுமி, ராதாநல்லூர். (25) என்.ஜே. சாந்தி, சென்னை-2.

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007. ஆசிரியர்: அ. மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

முரடன்

-எ. சோதி

முரடன் ஒருவன் மழைக்காக ஒரு வீட்டுத் திண்ணையில் ஒதுங்கியிருந்தான். அந்த வீட்டுக்காரனுக்குக் காசநோய் இருந்ததால் ஓயாமல் இருமிக் கொண்டிருந்தான்.

எரிச்சல் அடைந்த முரடன், "இனிமேல் நீ இருமினால் என்ன செய்வேன் என்றே எனக்குத் தெரியாது" என்று கோபத்துடன் சொன்னான்.

இருமலை அடக்க எவ்வளவோ முயன்றும் அவனால் முடியவில்லை. மீண்டும் இடைவிடாமல் இருமத் தொடங்கினான்.

"நான் சொல்லியும் கேட்காமல் இருமுகிறாயா?" என்று கோபத்துடன் கத்திய முரடன் தன் வாளை உருவி அவனை வெட்டிக் கொன்றான்.

பக்கத்தில் இருந்தவர்கள் எல்லோரும் முரடனைக் கட்டிப் பிடித்து கிருஷ்ணதேவராயரின் அரண்மனைக்கு இழுத்து வந்தார்கள்.

முரடனைப் பார்த்த கிருஷ்ணதேவராயர், "நீ ஏன் ஒரு குற்றமும் செய்யாத அவனை வீணாகக் கொன்றாய்?" என்று கேட்டார்.

"நான் அவனை இருமாதே என்றேன். மீறி இருமினான். என்னால் கோபத்தை அடக்க முடியவில்லை. அவனைக் கொன்றேன்" என்று ஆணவமாகப் பதில் சொன்னான் முரடன்.

இதைக் கேட்ட கிருஷ்ணதேவராயர் அப்பாஜியைப் பார்த்து, "மூடனாகவும் முரட்டனாகவும் இருக்கும் இவனுக்கு என்ன தண்டனை தருவது?" என்று கேட்டார்.

"தூக்குத்தண்டனைதான் இவனுக்குச் சரியான தண்டனை. முன்கோபமுடைய இவன் நமக்குப் பெரிதும் பயன்படுவான். அதனால் இவனைக் காவலில் வைத்து நல்ல உணவிட்டு, இவன் உடல் வலிமை மேலும் மிகும்படிச் செய்ய வேண்டும்" என்றார் அப்பாஜி.

கிருஷ்ணதேவராயரும் அப்பாஜி சொன்னபடியே அவனைக் காவலில் வைத்து நன்கு உணவளிக்குமாறு கட்டளையிட்டார்.

டில்லிப் பேரரசர் தன் அமைச்சர்களைப் பார்த்து, "வல்லமையுடைய அரசராக கிருஷ்ணதேவராயர் இருப்பதால் நமக்குக் கப்பம் கட்டுவதில்லை. பெரும்படை திரட்டிச் சென்று அவரை வென்று வரும் வல்லமை உங்களில் யாருக்கேனும் இருக்கிறதா?" என்று கேட்டான்.

முரடனும் கொடுமையானவனுமான ஒரு படைத் தலைவன்,

“அரசே! அனுமதி கொடுங்கள். நானே படையுடன் சென்று கிருஷ்ணதேவராயரை வென்று வருகிறேன்” என்றான்.

பேரரசரும், “வெற்றியுடன் திரும்புக” என்று அவனை அனுப்பி வைத்தார்.

கொடூரமான படைத் தலைவன் தலைமையில் பெரும்படை வருகிறது என்பதைக் கேட்ட கிருஷ்ணதேவராயர் திடுக்கிட்டார்.

அப்பாஜியை அழைத்து, “இப்பொழுது நாம் என்ன செய்வது. வருகின்றவன் கொடியவன் பெரும்படையுடன் வருகிறான். நம் நாட்டைக் காப்பாற்ற என்ன செய்வது?” என்று கேட்டார் கிருஷ்ணதேவராயர்.

“அரசே! கவலைப்படாதீர்கள். சிறையிலிருக்கும் அந்த முரடனை வரவழையுங்கள். நம் தூதனாக ஓலை கொடுத்து அவனைப் படையெடுத்து வரும் படைத் தலைவனிடம் அனுப்புவோம். பிறகு நடப்பதைப் பாருங்கள்” என்றார் அப்பாஜி.

திட்டமிட்டபடி முரடனிடம் ஓலையைக் கொடுத்து அனுப்பினார் கிருஷ்ணதேவராயர்.

முரடன் ஓலையை எடுத்துச் சென்று படையெடுத்து வரும் படைத் தலைவனிடம் தந்தான்.

ஓலையைப் படித்துப் பார்த்தான் படைத் தலைவன். அதில், “ஏழையும் எளியேனுமாகிய என்மேல் மேன்மைதாங்கிய தாங்கள் படையெடுத்து வருவதா? என்னை வரச்சொல்லி ஆணையிட்டிருந்தால் நானே ஓடிவந்திருப்பேனே. தாங்கள் காலால் இடும் வேலையை நான் தலையால் செய்து முடிக்க மாட்டேனா? சேரவேண்டிய கப்பப் பணத்தை நானே கொண்டு வருகிறேன்” என்று எழுதியிருந்தது.

“ச்சீ! வெட்கங் கெட்டவன். தன்மானம் இல்லாதவன். இவன் எல்லாம் அரசனாக இருக்கிறான். அரசர் குலத்திற்கே அவமானம்” என்று சொல்லி படைத் தலைவன் ‘தூ’ என்று காரி உமிழ்ந்தான்.

அவ்வளவுதான், கோபம் கொண்ட முரடன் தான் இருக்கும் சூழ்நிலையை மறந்தான். வாளை உருவிப் படைத் தலைவனை ஒரே வெட்டாக வெட்டிக் கொன்றான். பக்கத்திலிருந்த வீரர்கள் முரடனை வெட்டிப் போட்டார்கள்.

தலைவன் இல்லாததால் இனிப் படையெடுப்பு நடத்த முடியாது என்பதை உணர்ந்த வீரர்கள் நாடு திரும்பினார்கள்.

அப்பாஜியின் சூழ்ச்சி வெற்றி பெற்றதை அறிந்த கிருஷ்ணதேவராயர் அவரைப் பெரிதும் பாராட்டினார்.

★

அடுத்த காமிக்ஸ்

மந்திரவாதி மாண்டிரிக் தோன்றும்

மயக்கும் மோகினி

கட்டுக்கோப்பான உடலமைப்பு கொண்ட ஆண்களை மயக்கி தனது வலையில் விழச் செய்கிறாள் ஒரு பெண். ஏன்?

ஜூலை 1-ந்தேதி ராணி காமிக்ஸ் வாங்கிப் படியுங்கள்!
விறுவிறுப்பான படக்கதை!

"ராணி காமிக்ஸ்", சென்னை - 600 007.

Regd. No. TN/MS(N)/461

GX.223.90. Tm R